**கடுவல மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுவல மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடுவல மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 15.13 ஆம் பிரிவின் பிரகாரம் 2155/6 மற்றும் 2019 திசெம்பர் 26 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள மாநகர சபை நிதி நிர்வாகத்திற்குரிய கணக்கு ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.<br>உதாரணமாக வரி ரூபா 644,362 ஆல் பதிவழிக்கப்பட்டிருந்தது. | சபை மூலம் பதிவழிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள தொகையை பதிவழித்தல் தொடர்பாக சட்டமேவுகையொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாண பொது வீதிகள், மதகுகள் மற்றும் பாலங்கள் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். 2020 இன் பின்னர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட 10 கட்டிடங்களின் பெறுமதி மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் சபைக்கு கையேற்கப்பட்ட 32 காணிகளின் பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன் | நியமங்கள் மற்றும் வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,300,000 பெறுமதி போதி கொடல்ல ஒத்த காணி ரூபா 2,391,000 ஆன ஆரம்ப மீள் மதிப்பீட்டு மீதிக்கு உள்ளடக்கப்பட்டிருக்கையில் மீண்டும் மீளாய்வாண்டில் கையேற்றலாக 2,300,000 தொகை கணக்கீடு செய்தமையால் காணி கணக்கு அப்பெறுமதிளால் மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது. | தவறு இடம் பெற்றுள்ளதாக ஏற்றுக்கொள்கின்றேன். அதன் பிரகாரம் நாட்குறிப்பு மூலம் குறித்த தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 05 கணக்குப் விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பயன்பாட்டு பதிவேடு / அட்டவணைகளின் பிரகாரம் பெறுமதிகளுக்கு இடையே ரூபா. 47,909,550 வேறுபாடு காணப்பட்டது | அட்டவணைகளை சீர் செய்ய நடவடிக்கைகள் எடுப்பேன் | பயன்பாட்டு பதிவேடு / அட்டவணைகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்விற்கு எழுத்துமூலமான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 319,545,226 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்பதிகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | குறித்த கொடுக்கல் வாங்கல்கள் இனங்காணப்படக்கூடிய சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | (i)254(அ)(2) ஆம் பிரிவு | இப் பிரிவின் பிரகாரம் தேவையான அனைத்து நடவடிக்கைகள் எடுத்தல் மாநகர ஆணையாளரின் செயற்பாடொன்றாக இருந்த போதும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருமான விடயங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 86,010,074 தொகை நிலுவை தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை தொகை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தொகை அறவிட்டு மாநகர சபை நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும். |
| | (ii) நி.பி 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 21,176,993 தொகையான பொது வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர் வரும் ஆண்டில் சீராக்கம் செய் வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவீனத்தை விஞ்சிய வருமானம் ரூபா 294,584,222 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 485,243,772 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 644,362 ஆன நிலுவை வீத வரி மீதியொன்று சபை தீர்மானத்தின் பேரில் பதிவேடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | சபை மூலம் பதிவழிப்பதற்கு பரிந்துரைத்த தொகையை தவிர எஞ்சிய தொகைக்காக சட்ட ஆலோசனை எதிர்பார்த்துள்ளேன். | முறையான அங்கீகாரத்தின் பேரில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2.2. வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **நிலுவை வீத வரி** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 73,338,420 பெறுமதியான நிலுவை வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வினோத வரி** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் கடுவல மாவட்ட அலுவலகத்திற்கு அறவிடப்பட வேண்டி காணப்படும் வினோத வரியின் பெறுமதி ரூபா 3,964,230 இருந்தது. | 2018.07.30 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலுவையின் பிரகாரம் அறவிடுவதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது. | நிலுவை வினோத வரியை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **பேருந்து நிலைய கட்டணங்கள்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை மீதி ரூபா 103,299 ஆக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்படி அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை பேருந்து நிலைய கட்டணங்கள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | **முத்திரைக் கட்டணங்களும் நீதிமன்றத் தண்டப்பணமும்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய ரூபா. 700,000,000 ஆன முத்திரைக் கட்டணங்களும் ரூபா. 3,000,000 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் காணப்பட்டன. | முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்றத் தண்டப்பணத்தையும் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பேன் | பெற வேண்டிய வருமானதத்தை சேகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடுவெல பஸ் தரிப்பிடத்தில் 7 கடைகளை அபிவிருத்தி செய்வதற்காக 2019 சனவரி 01 ஆந் திகதி சபைக்கு கையேற்கப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 30 ஆந் திகதி வரை அபிவிருத்தி நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாமையால் மீளாய்வாண்டில் சபைக்கு ரூபா 416,600 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அத்துகிரிய மாவட்ட அலுவலகத்தை மெகா சிட்டி கடைத்தொகுதிக்கு கொண்டு செல்லும் தீர்மானத்திற்காக 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி 05 கடைகளை சபைக்கு கையேற்ற மையால் ரூபா 111,100 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. அத்துடன் மாவட்ட அலுவலகத்தை மெகா சிட்டி கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 08 கடைகள் முத்திரையிடப் பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு ரூபா 487,400 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கடைகளிலிருந்து போதியளவு வருமானமொன்று கிடைக்கவில்லையென கடை உரிமையாளர்கள் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தால் ஏழு கடைகளை 2019 ஜனவரி ஆந் திகதி மீண்டும் கை யேற்கப்பட்டிருந்தன. நிலவிய தொற்று நிலைமை காரணமாக நிலுவை அறவிடுவதற்கு முடியாதிருந்த போதும் முடியுமான வரை விரைவில் அந் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக அறிய தருகின்றேன். | உத்தேச அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**<br>நகர சபை பிரதேசத்தில் கழிவுப் பொருள் வெளியேற்றுதல் தொடர்பான கழிவுப் பொருள் போக்குவரத்திற்காக 04 ஒப்பந்த நிறுவனங்களை ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது கழிவுப் பொருள் போக்குவரத்திற்காக ரூபா 47,504,958 கொடுப்பனவு | கொம்பேஸ்ட் உற்பத்தி 5 ஆண்டு திட்டத்தில் உள்ள உற்பத்தி இலக்கின் பிரகாரம் நிறைவேற்று நடவடிக்கை | திட்டத்தின் பிரகாரம் முழுமையான அளவில் அடைந்து கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருள் சேகரிப்பிற்காக இயந்திரங்களை கொள்வனவு செய்தல், கொம்போஸ்ட் கூடங்களை கொள்வனவு செய்தல் போன்ற சேகரிக்கும் திரட்டிய செயற்பாடுகளுக்காக ரூபா 230,810,439 ஆன செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சபையின் கொம்போஸ்ட் பிரிவினை மேம்படுத்துவதற்காக ரூபா 5,855,000 செலுத்தி கொம்பேஸ்ட் உற்பத்தி இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் கொம்பேஸ்ட் உற்பத்தி 177,465 கிலோ கிராம் ஆக இருந்தது. சபையின் ஐந்தாண்டு திட்டத்தின் பிரகாரம் குறித்த இலக்கை அடைந்து கொள்வதற்கு மாதமொன்றுக்கு கொம்போஸ்ட் உற்பத்தி 20 – 60 தொன் வரை அதிகரிக்கப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | எடுப்பேன். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர முதல்வர் பங்கேற்கும் விழாக்கள் மற்றும் பொது வைபவங்களில் புகைப்படம் எடுப்பதற்கும் வீடியோ எடுப்பதற்கும் சபையின் ஊடாக பிரிவின் மூலம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,171,500 பெறுமதியான வீடியோ கமரா ஒன்றும் புகைப்பட கமராவொன்றும் அதற்கு தேவையான ஏனைய உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அத்துடன் இது தொடர்பாக அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.2 (இ) 3.4.2 மற்றும் 6.3.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஆலோசனை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | இதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்படாதிருந்த போதும் விலை கோரல் மேற்கொள்ளப்பட்டு குறைந்த விலை சமர்ப்பித்த நிறவனத்திடமிருந்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |